வரையறுக்கப்பட்ட சீ.டபிள்யூ.ஈ எக்கனமிக் சென்றர்ஸ் சேர்விசஸ் (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வழங்குவது எனது பொறுப்பாகும்.

## 1.4 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

(அ) கணக்காய்விற்கு தேவையான சான்றாதாரங்களை சமர்ப்பிக்கப்பாடமையினால் கடன்கொடுத்தோர்கள், கடன்பட்டோர்கள் மற்றும் செலவினங்களின் கூட்டு மொத்த தொகை ரூபா. 206,361,134 பெறுமதி திருத்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கோ அல்லது கணக்காய்வில் ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் மீளாய்வாண்டின் மதிப்பீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 மார்ச் 31இல் காசுப்புத்தகத்தில் காட்டப்பட்டிருந்த வங்கியிலுள்ள மீதிக்கும் அத்திகதியில் காணப்பட்ட நிதி நிலைமைக்கூற்று அறிக்கையில் காட்டப்பட் வங்கி மீதிக்கும் இடையில் ரூபா. 56,417 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கம்பனியின் ஊழியர் சேமலாப நிதியம், பாதீட்டு கொடுப்பனவு, வாழ்க்கை படிக் கொடுப்பனவு மற்றும் மாதாந்த கொடுப்பனவுகள் ஆகியவற்றுக்கான பங்களிப்புக்கள் ரூபா. 2,613,391 பெறுமதியினால் அதிகரித்துள்ளதுடன் ஊழியர் நம்பிக்கை நிதியம், தலைமை அலுவலக உத்தியோகத்தர்களின் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் ஆகியவற்றுக்கான பங்களிப்புக்கள் ரூபா. 917,583 இனால் குறைவடைந்துள்ளது. ஆகையால் மீளாய்வாண்டு மதிப்பீட்டின் போது ஊழியக் கிரயம் மற்றும் இலாபங்கள் ரூபா. 1,695,808 பெறுமதியினால் அதிகரிக்கப்பட்டிருந்தன.

(உ) கடன்பட்டோர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய கூட்டுமொத்த மீதிகளில் ரூபா 4,548,227 பெறுமதியானது கணக்கீட்டில் அறவிடமுடியாக்கடனாக காட்டப்பட்டிருந்தன. இம் மீதிகள் 05 வருடங்களுக்கு மேலாக 31 மார்ச் 2017 வரை மீளப்பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் சமநிலைப்படுத்தாமல் தனித்தனியாக அறிக்கையில் காட்டப்பட வேண்டும். ஆகையால் சுத்திகரிப்பிற்கான கடன்பட்டோர் மீதிகள் ரூபா. 912,041 பெறுமதிக்கு எதிராக சுத்திகரிப்பிற்கான கடன்கொடுத்தோர் மீதிகள் ரூபா. 71,225 பெறுமதிகள் சமநிலைப்படுத்தப்பட்டு தேறிய பெறுமதியான ரூபா. 840,817 நிதி நிலமைக்கூற்றில் வருமதியாக காட்டப்பட்டிருந்தன.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராய மறுப்பு

இவ்வறிக்கையின் அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் உசிதமான கணக்காய்வுச் சான்றை என்னால் பெற முடியாதுள்ளது. அதன் காரணமாக, இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை.

#### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவினால் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்:

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்விற்கான நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேலே குறிப்பிடப்பட்டவாறாகும்.

(ஆ) எனது அபிப்பிராயமாவது:
எனது கணக்காய்விற்குத் தேவைப்பட்ட எல்லாத் தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொள்ளவில்லை எனவே இந்த நிதி அறிக்கைகளில் நான் கருத்து தெரிவிக்கவில்லை.

### 2.2 கம்பனியின் ஒருங்கிணைப்பு

கம்பனியின் ஸ்தாபிப்பு தொடர்பான அமைச்சரவையின் அங்கீகாரம் கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் திட்டம் பொதுத் திறைசேரியின் ஒத்துழைப்புடன் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 தொடர்ந்து இயங்கும் தன்மை

நிதிக்கூற்றின் படி, கம்பனியின் வருமானத்தில் 85.33 சதவீதமானது லங்கா சதொச லிமிட்டட்டிடமிருந்து பெறப்பட்டிருந்தன அத்துடன் கம்பனியானது லங்கா சதொச லிமிட்டட்டுடன் சேவை தொடர்பான ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந் நடவடிக்கை கம்பனியின் தொடர்ந்து இயங்கும் தன்மையில் பாதிப்பினை ஏற்படுத்தும்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 4,981,312 வரிக்கு பின் தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 2,676,179 வரிக்கு பின் தேறிய இலாபமொன்றாகக் காணப்பட்டமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 2,305,133 ஆன முன்னேற்றத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது. வருமானம் ரூபா 26,592,020 இனால் அதிகரித்தமையே நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

**(அ) கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிலிருந்து கம்பனியினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியினால் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 இன் டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வுக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) சொத்து முகாமைத்துவம் | பொருள் மெய்மையாய்வை நடாத்துவதற்கு/ சொத்துக்களினை மெய்மையாய்வு செய்வதற்குத் தவறியமை. |
| (ஆ) கணக்கீடு | பேரேட்டுக் கணக்கிலுள்ள மீதிகள் சான்றுறுதி ஆவணங்களுடன் உறுதிப்படுத்த முடியவில்லை. |
| (இ) மனித வள முகாமைத்துவம் | (i) திறைசேரியிடமிருந்து பதவி நிலைகக்கான அனுமதியினை பெற்றுக்கொள்வதற்கு தவறியமை.<br>(ii) ஊழியர்களினை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் மற்றும் பதவியுயர்வுகளை மேற்கொள்வதற்குமான திட்ட அட்டவணைகள் காணப்படவில்லை. |